26.09.2024 ம.சா.1 ராமசாமி Mcop 288 of 2021

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

02.01.2021ம் தேதிய டிஸ்சார்ஜ் சம்மரி ஜெராக்ஸ் நகல் ம.சா.ஆ7. (3ம்எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.) மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

3ம்எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் காயம்பட்டது லிங்கம் என் மனைவி என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக காவல்நிலையத்திற்கு தகவல் கொடுத்தது என் மனைவி என்றால் சரிதான். விபத்து எப்படி யாருடைய கவனக்குறைவால் நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். விபத்தில் காயம்பட்ட என் மனைவி இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது தான் இறந்து போனார் என்றால் சரிதான். இறந்து போன என் மனைவி பீடி சுற்றும் மூலம் மாதம் ரூ.10ஆயிரம் சம்பாதித்தை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.விபத்துக்கு பின்பு பல்வேறு தனியார் மருத்துவ மனைகளில் என் மனைவி சிகிச்சை பெற்றதற்குரிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரிதான். என் மனைவி எந்த தேதியில் இறந்து போனார் என்பதற்கான இறப்பு சான்று தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்தினால் ஏற்பட்ட காயத்தினால் தான் என் மனைவி இறந்து போனார் என்றும் அதற்கான வடமலையான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதாக என் முதல்விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி விபரத்தை சொல்லாத நிலையில் தற்போது தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ7 ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ6ல் உள்ள பில்கள் வடமலையான் மருத்துவமனையின் பில்கள் தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த பில்கள்

ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. என் மனைவி இந்த வழக்கு தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்துபோனதால் அதிக இழப்பீடுகோரி வழக்கை சீர் திருத்தம் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ம.சா.ஆ6 பில்கள்ளில் பில் எண்.31470ல் பில் பெயர் குறிப்பிடாமல் உள்ளதால் அது ஏற்கதக்கது அல்ல என்றால் சரிதான். பி.எண். கே.என்.5836 என்ற பில்லில் நோயாளி பெயர் இந்து என குறிப்பிடப்பட்டுள்ளதால் அந்த பில் ஏற்கதக்கது அல்ல என்றால் சரிதான்ம.சா.ஆ6 கண்ட பில் நம்பர் 12272 என்ற நம்பர் கொண்ட வடமலையான் மருத்துவமனை பில் ஏற்கதக்கது அல்ல என்றால் சரிதான். விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் தான் அஸ்துமா வந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வடமலையான் மருத்துவமனையில் சேர்த்த விபரம் சொல்லவில்லை என்றால் சரிதான். என் மனைவிக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என்றால் சரியல்ல. அதை பொறுத்து மட்டும் தான் நான் இழப்பீடுகோர கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல. விபத்து 1ம்எதிர்மனுதாரரின் அதிவேகம் காரணம் என்பதால் 1,2 எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றாலும் 3ம்எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல. நான்கோரியுள்ள இழப்பீடு தொகை அதிகமானது என்றால் சரியல்ல.